**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **CC 513/2004** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for | Prosecution : | **PW - 53** |
| | Defence : | |
| | Court : | |

| | | |
|---|---|---|
| Name | : | சீனிவாசன் |
| Father's / Husband Name | : | த.பெ. ராமதாஸ் |
| Village | : | நாகமரத்து சந்து கொண்டிராஜபாளயம் |
| Taluk | : | தஞ்சாவூர். |
| Caste & Religion | : | இந்து |
| Calling | : | சேல்ஸ் மேன் |
| Age | : | 49 /2019 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.08.2019**

**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி.ஆர்மங்கையர்கரசி (பெஞ்ச் கிளார்க்)படி நிலை 3, ச.சுரேஷ் தட்டச்சர்**

**CC 513 /2004** Date: 30.08.2019

முதல் விசாரணை

நான் தற்போது தஞ்சாவூர் கொண்டிராஜபாளயம் நாகமரத்து சந்தில் குடியிருந்து வருகிறேன்- நான் தஞ்சாவூர் கோ ஆப்ரேட்டிவ் ஸ்டோரில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 தெரியாது . வழக்கின் 1வது எதிரியை தெரியும். மற்ற எதிரிகளை தெரியாது. கடந்த 1999 ம் வருடம் எனது மகள் ஸ்ரீதேவி என்ற பெயரில் ஐயன்கடை தெருவில் உள்ள கணபதி ஜீவ்ல்லரியில் காமதேனு தங்க நகை சிறுசேமிப்பு திட்டத்தில் மாதம் ருபாய் 150 வீதம் 25 மாதங்களுக்கு மொத்தம் ருபாய் 3750 செலுத்தினேன். பணம் கட்டிமுடித்த பின்பு நகை எடுப்பதற்காக கணபதி ஜீவ்ல்ல்ரிக்கு சென்ற போது கடை பூட்டப்பட்டு சீல் போடப்பட்டிருந்தது . பின்னர் விசாரித்த போது 1ம் எதிரி கடை பூட்டிவிட்டு ஓடிவிட்டதாகவும் தெரிந்து கொண்டேன். என் பணத்தை மோசடி செய்த கணபதி என்பவர் மீது மாவட்ட குற்றப்பிரிவில் புகார் அளித்தேன். நான் பணம் செலுத்தி எனக்கு வழங்கப்பட்ட பாஸ்புக்கின் கணக்கு எண் 187 ஸ்ரீதேவி என்ற பெயரில் வழங்கப்பட்ட பாஸ்புக் சா.பொ. 92 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தஞ்சாவூர் ஐயன் கடைதெருவில் கணபதி ஜீவல்லரி என்ற கடையே இல்லையென்றாலும் சிறுசேமிப்பு திட்டம் எதும் இல்லை என்றாலும் நான் முன்விசாரணையில் சொல்லியுள்ளவாறு மேற்படி திட்டத்தில் சேரவே இல்லையென்றாலும் அதே போல் தொகை எதுவும் செலுத்தவில்லையென்றாலும் சரியல்ல. சா.பொ. 92 இவ்வழக்கிற்கு சம்மந்த படாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல . நான் மாவட்ட குற்றப்பிரிவு போலிசாரிடம் எழுத்துப்பூர்வமாக புகார் எழுதி கொடுத்துள்ளேன். போலிஸார் சொல்லிக்கொடுத்தன் பேரில் முன்விசாரணையில் பொய்யாக சாட்சி அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கட்டியதாக சொல்லும் பணத்திற்கு உரிய பரிசு பொருட்களை நான் பெற்றுவிட்டதாக சா.பொ. 92 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை

ஒம்.அ.முகம்மதுஅலி,<br>
நீதித்துறை நடுவர் எண்-1<br>
தஞ்சாவூர்.